# மாதிரி வினாத்தாள்
# (இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கான பொதுத்தேர்வு)

## தமிழ் மொழித் தகுதித் தேர்வு
## பகுதி–அ

01 கூற்று: 1 செய்யுளில் ஒரு பெயர்ச் சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்
கூற்று: 2 செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாக மாறி அளபெடுப்பது இசைநிறை அளபெடை ஆகும்

A) கூற்று 1, 2 சரி
B) கூற்று 1 சரி 2 தவறு
C) கூற்று 1, 2 தவறு
D) கூற்று 1 தவறு 2 சரி

02 பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. வல்லினம் | – | 1) அ, இ, உ |
| ஆ. மெல்லினம் | – | 2) ய், ர், ல், வ், ழ், ள் |
| இ. இடையினம் | – | 3) ங், ஞ், ண், ந், ம், ன் |
| ஈ. சுட்டெழுத்துகள் | – | 4) க், ச், ட், த், ப், ற் |

A) 4, 3, 2, 1
B) 3, 4, 2, 1
C) 2, 1, 3, 4
D) 4, 2, 1, 3

03 உயிர்மெய் எழுத்துகள் எவ்வாறு தோன்றுகின்றன?

A) உயிர் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால்
B) மெய்யெழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால்
C) மெய்யெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால்
D) உயிர் எழுத்துக்களும் மெய்யெழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால்.

04 வல்லின மெய்களுக்கு இன எழுத்துகளாக வருபவை ___________

A) இடையின மெய்கள்
B) மெல்லின மெய்கள்
C) உயிர் எழுத்துகள்
D) ஆய்த எழுத்து

05 சொல்லின் முதனிலை என்பது எது?

A) விகுதி
B) சாரியயை
C) விகாரம்
D) பகுதி

06 பகாப்பதச் சொல்லைக் கண்டறிக.

A) படித்தான்
B) தேடி
C) மலை
D) வளர்க

07 கூற்று: 1 ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல்.
கூற்று: 2 பெயர்ச் சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொல் உரிச்சொல்

A) கூற்று 1 சரி 2 தவறு
B) கூற்று 2 சரி
C) கூற்று 1, 2 சரி
D) கூற்று 2 தவறு

08 பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. பந்தர் | – | i) முதற்போலி |
| 2. மைஞ்சு | – | ii) முற்றுப்போலி |
| 3. அஞ்சு | – | iii) இடைப்போலி |
| 4. அரையர் | – | iv) கடைப்போலி |

A) (iii) (ii) (iv) (i)
B) (i) (ii) (iv) (iii)
C) (ii) (i) (iii) (iv)
D) (iv) (i) (ii) (iii)

09 'இரண்டு கிலோ கொடு' என்பது ____________ ஆகுபெயர் ஆகும்.

A) எண்ணலளவை ஆகுபெயர்
B) கருத்தாவாகுபெயர்
C) எடுத்தலளவை ஆகுபெயர்
D) நீட்டலளவை ஆகுபெயர்

10 மாடு வயலில் புல்லை மேய்ந்தது'.
இத்தொடரிலுள்ள வினைமுற்று எது?

A) மாடு
B) வயல்
C) புல்
D) மேய்ந்தது

11 தாய் + மொழி – எவ்வகை புணர்ச்சி ?

A) விகாரப் புணர்ச்சி
B) இயல்பு புணர்ச்சி
C) குற்றியலுகரப் புணர்ச்சி
D) உடம்படுமெய்ப் புணர்ச்சி

12 பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. வேற்றுமைத் தொகை | – | i) மலர்விழி |
| 2. வினைத் தொகை | – | ii) வெண்ணிலவு |
| 3. பண்புத் தொகை | – | iii) வளர் தமிழ் |
| 4. உவமைத் தொகை | – | iv) சிதம்பரம் சென்றான். |

A) (iv) (ii) (i) (iii)
B) (iv) (i) (iii) (ii)
C) **(iv) (iii) (ii) (i)**
D) (iv) (i) (ii) (iii)

13 'பிறப்பு' என்னும் வாய்பாடு ஓரசைச்சீரில் எந்த அசைக்கு பொருந்தும்?

A) நிரைவு
B) நேர்பு
C) நிரை
D) நேர்

14 'இரட்டுற மொழிதல் அணியின் வேறுபெயர் ___________

A) பிறிது மொழிதல் B) வேற்றுமை

C) உவமை D) சிலேடை

15 பொருத்துக.

1. குறிஞ்சி – i) வயலும் வயல் சார்ந்த இடமும்
2. முல்லை – ii) கடலும் கடல் சார்ந்த இடமும்
3. மருதம் – iii) காடும் காடு சார்ந்த இடமும்
4. நெய்தல் – iv) மலையும் மலை சார்ந்த இடமும்.

A) (iv) (iii) (i) (ii) B) (iii) (ii) (i) (iv)

C) (iv) (ii) (iii) (i) D) (ii) (i) (iv) (iii)

16 எந்த ஓசை இருவர் உரையாடுவது போன்று இருக்கும்?

A) அகவலோசை B) துள்ளலோசை

C) தூங்கலோசை D) செப்பலோசை

17 வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு ___________ வரும்

A) இறுதியில் B) முதலில்

C) இடையில் D) கடையில்

18 ___________, ___________, என்ற சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும்.

A) வந்த, தந்த B) போல, போன்ற

C) என, ஆக D) விட, தேட

19 பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

A) பொற் + கோட்டு B) பொன் + கோட்டு

C) பொற்கோ + இட்டு D) பொண் + கோட்டு

20 விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

A) விழியெழும் B) விழித்தெழும்

C) விழித்தழும் D) விழித்து எழும்

21 அடிசில் – என்பதன் பொருள்

A) சேறு B) சோம்பல்

C) சோறு D) ஊரு

22 அரசன் – எதிர்பாலுக்குரிய பெயரை எழுதுக.

A) அரசி
B) தோழி
C) தலைவி
D) செவிலி

23 கீழ்வருவனவற்றுள் பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

A) காவற்பெண்டு
B) நாகரிகம்
C) பண்பாடு
D) கலாச்சாரம்

24 "ஒங்கள மாதிரி ஆடணுமுன்னு ரொம்ப ஆசை" – இத்தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

A) ஒங்கள மாதிரி ஆடவேணும்னு ரொம்ப ஆசை
B) உங்களைப் போல் ஆடவேண்டுமென்று மிகுந்த ஆசை
C) உங்களை மாதிரி ஆடவேணும்னு மிகுந்த ஆசை
D) உங்கைளைப் போல ஆடணுமுன்னு மிகுந்த ஆசை

25 'Lift' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக.

A) மின்படிக்கட்டு
B) மின்தூக்கி
C) உரைக்க
D) மறைக்க

## பகுதி–ஆ

26 எனைத்தானும் நல்லவை __________ விடுபட்ட சொல்லை எழுதுக.

A) காண்க
B) கேட்க
C) உரைக்க
D) மறைக்க

27 "தோண்டும் அளவிற்கு மணற்கேணியில் நீர் சுரக்கும் கற்கும் அளவிற்கு அறிவு வளரும்" – என்று கூறும் நூல் எது?

A) மூதுரை
B) ஏலாதி
C) நாலடியார்
D) திருக்குறள்

28 நண்பர்களின் இயல்பை அளக்கும் கோலாக வள்ளுவர் கூறுவது

A) நம்முடைய துன்பம்
B) நம்முடைய இன்பம்
C) நம்முடைய கல்வி
D) நம்முடைய செல்வம்

29 கூற்று: 1 முயற்சி செய்தால் ஒருவர்க்கு வறுமை வந்து சேரும்.

கூற்று: 2 முயற்சி இல்லாவிட்டால் செல்வம் பெருகும்.

A) கூற்று 1 சரி 2 தவறு
B) கூற்று 1, 2 சரி
C) கூற்று 1 தவறு 2 சரி
D) கூற்று 1, 2 தவறு

30 பொருத்துக.

1. நுணங்கிய கேள்வியர் – i) அறன் அல்லாத செயல்களைச் செய்யாமை
2. பேணாமை – ii) நுட்பமான கேள்வியறிவு உடையவர்
3. செவிச்செல்வம் – iii) பாதுகாக்காமை
4. அறனல்ல செய்யாமை – iv) கேட்பதால் பெறும் அறிவு.

A) (i) (ii) (iv) (iii)
B) (ii) (iii) (iv) (i)
C) (iv) (iii) (ii) (i)
D) (iii) (iv) (ii) (i)

31 'தமிழென் கிளவியும் அதனோ ரற்றே' – என்ற வரி இடம் பெறும் நூல் ?

A) தொல்காப்பியம்
B) கம்பராமாயணம்
C) நன்னூல்
D) மணிமேகலை

32 தொல்காப்பியம் கடற்பயணத்தை ___________ வழக்கம் என்று கூறுகிறது.

A) முந்நீர்
B) நன்னீர்
C) தண்ணீர்
D) கண்ணீர்

33 'இராமவதாரம்' எனத் தமது நூலுக்கு யெரிட்டவர் யார்?

A) புலவர் குழந்தை
B) காளிதாசர்
C) கம்பர்
D) வால்மீகி

34 கலித்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

A) 500
B) 400
C) 100
D) 150

35 பண்டைத் தமிழர்களின் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் நூல் எது ?

A) தொல்காப்பியம்
B) பதிற்றுப்பத்து
C) புறநாணூறு
D) அகநாணூறு

36 மறுமை இன்பத்தை அடையவும் உலகு முழுவதையும் வெல்லவும் நிலையான புகழைப் பெறவும் விரும்புபவர் செய்ய வேண்டியது எது ? என புறநாணூறு கூறுகிறது.

A) படைபலத்தைப் பெருகச் செய்தல்
B) நெல் முதலிய தானியங்களைச் சேர்த்து வைத்தல்
C) அதிக பொருள் செல்வத்தைச் சேர்த்து வைத்தல்
D) நிலம் குழிந்த இடங்களில் நீர்நிலைகளைப் பெருகச் செய்தல்

37 முல்லைப்பாட்டு எவ்வகைப் பாவால் ஆனது ?

A) வெண்பாவால்
B) ஆசிரியப்பாவால்
C) கலிங்கப்பாவால்
D) வஞ்சிப்பாவால்

38 பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. நாமநீர் வேலி | – | i) சீவகசிந்தாமணி |
| 2. தோரண வீதியும் | – | ii) யசோதரகாவியம் |
| 3. அடிசில் வைகல் | – | iii) சிலப்பதிகாரம் |
| 4. ஆக்குவது ஏதெனில் | – | iv) மணிமேகலை |

A) (i) (iii) (iv) (iii)
B) (iii) (ii) (i) (iv)
C) (iii) (iv) (i) (ii)
D) (iv) (ii) (iii) (i)

39 சீவகசிந்தாமணி என்னும் நூல் __________ ஒன்று

A) ஐம்பெருங்காப்பியங்களில்
B) ஐஞ்சிறு காப்பியங்களில்
C) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில்
D) பதினெண் மேற்கணக்கு நூல்களில்

40 அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறும் நூல் எது ?

A) நீலகேசி
B) யசோதர காவியம்
C) சிலப்பதிகாரம்
D) மணிமேகலை

41 நீக்க வேண்டிய களையாக முனைப்பாடியார் கூறுவது யாது ?

A) அன்பு
B) பண்பு
C) அறம்
D) வன்சொல்

42 மேதையர் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர் என்பதற்கு காரியாசன் எதனை ஒப்பிடுகிறார் ?

A) விதை விதைக்காமல், தானே முளைத்து வரும் விதைகள்
B) பூக்காமலே காய்க்கும் மரங்கள்
C) காய்த்தும் பழுக்காமல் இருப்பன
D) விதைத்து முளைக்காமல் இருப்பன.

43 திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமை கணக்கராகப் பணிபுரிந்தவர் __________

A) குமரகுருபரர்
B) தாயுமானவர்
C) நக்கீரர்
D) இடைக் காடனார்

44 பன்னிரு ஆழ்வார்களுள் முதல் மூவர்

A) பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
B) பெரியாழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார்
C) பேயழ்வார், நம்மாழ்வார், பொய்கை ஆழ்வார்
D) பூதத்தாழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆண்டாள்.

45 பெருமாள் திருமொழி பாடியவர் __________

A) குலசேகராழ்வார்
B) ஆண்டாள்
C) நம்மாழ்வார்
D) மதுரகவி ஆழ்வார்

46 பாட்டுடைத் தலைவரை, குழந்தையாகக் கருதிப் பாடப்படும் இலக்கியம் எது?

A) இலம்பகம்
B) உலா
C) பிள்ளைத்தமிழ்
D) தூது

47 திருவாரூர் மும்மணிக்கோவை என்ற நூலின் ஆசிரியர் __________

A) அப்துல் ரகுமான்
B) வீரமாமுனிவர்
C) சுரதா
D) குமரகுருபரர்

48 கருணாகரத் தொண்டைமான் என்பவன் பரணி இலக்கியத்தில் போற்றப்படும் ______

A) அரசன்
B) படைத்தலைவன்
C) அரசவை புலவன்
D) விடுதலை வீரன்

49 கரிசல் களத்தையும் மக்களையும் மையப்படுத்திக் கரிசல் இலக்கியத்தை நிலை நிறுத்தியவர் ______

A) வண்ணநிலவன்
B) ஜெயகாந்தன்
C) கி.ராஜநாராயணன்
D) ந.பிச்சமூர்த்தி

50 சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் குடக்கூத்து ___ ஆட்டத்திற்கு அடிப்படை என்று கருதப்படுகிறது.

A) காவடியாட்டம் B) தேவராட்டம்

C) கரகாட்டம் D) தப்பு ஆட்டம்

51 கூற்று: 1 நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர் பெற்றது.

கூற்று: 2 தால் என்பதன் பொருள் நாக்கு.

A) கூற்று 1 சரி கூற்று 2 தவறு B) கூற்று 1 மட்டும் சரி

C) கூற்று 2 மட்டும் சரி D) கூற்று 1, 2 சரி

52 கவிஞர் மு.மேத்தாவின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் எது?

A) கண்ணீர்ப் பூக்கள் B) ஆகாயத்துக்கு அடுத்த வீடு

C) ஊர்வலம் D) சோழநிலா

53 இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் கண்ணதாசனின் நூல் ___ ஆகும்.

A) இயேசு காவியம் B) சிலுவைப்பாடுகள்

C) இரட்சண்ய யாத்திரிகம் D) இயேசுவின் சிந்தனைகள்

54 "அப்படியே நிற்கட்டும் அந்த மரம்" என்னும் நூலை எழுதியவர் யார் ?

A) சிற்பி பாலசுப்பிரமணியன் B) கல்யாண் ஜி

C) ராஜமார்த்தாண்டன் D) கலாப்பிரியா

55 எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய "லைட் ஆஃப் ஆசியா" என்னும் நூலைத் தழுவி தமிழில் "ஆசிய ஜோதி" என எழுதியவர்

A) புவியரசு B) தாராபாரதி

C) அ. முத்தரையனார் D) தேசிய விநாயகனார்

## பகுதி–இ

56 "ஊசிகள்" என்ற நூலின் ஆசிரியர்

A) கவிஞர் மீரா
B) கவிஞர் வைரமுத்து
C) கவிஞர் சுரதா
D) கவிஞர் வாணிதாசன்

57 "எழிலோவியம்" என்னும் நூலின் ஆசிரியர்

A) தமிழன்பன்
B) அறிவுமதி
C) மு.மேத்தா
D) வாணிதாசன்

58 ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ என்னும் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்தவர்

A) கவிஞர் தமிழ்ஒளி
B) ஈரோடு தமிழன்பன்
C) வைரமுத்து
D) மேத்தா

59 மலைக்கள்ளன், என்கதை, சங்கொலி ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?

A) கண்ணதாசன்
B) நமக்கல் கவிஞர்
C) கவிமணி
D) வாணிதாசன்

60 தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலைக்கூடம் அமைந்துள்ள இடம் ___

A) தஞ்சை கோவில்
B) அரிக்கமேடு
C) ஆதிச்சநல்லூர்
D) மாமல்லபுரம்

61 "கத்துங் குயிலோசை _ சற்றே வந்து காதில் படவேணும் _ என்றன்" இவ்வரிகளின் ஆசிரியர் யார் ?

A) பாரதிதாசன்
B) பாரதியார்
C) இராமலிங்க அடிகள்
D) தேசிகவிநாயகனார்

62 கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ___

A) நங்கூரம்
B) சுக்கான்
C) கண்ணடை
D) சமுக்கு

63 கழுத்தில் சூடுவது ___

A) கணையாழி
B) தார்
C) தண்டை
D) மேகலை

64 தமிழர் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது

A) நாவாய்
B) வங்கம்
C) கலம்
D) ஓடம்

65 பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. இளமை விருந்து | – | i) வஞ்சி |
| 2. ஆண் பொருநை | – | ii) சிற்பக்கூடம் |
| 3. சேரர் தலைநகரம் | – | iii) அமராவதி |
| 4. கலைக்கூடமாகக்காட்சி தருவது | – | iv) திரு.வி.க |

A) (ii) (iv) (iii) (i)
B) (iii) (iv) (ii) (i)
C) (i) (ii) (iii) (iv)
D) (iv) (iii) (i) (ii)

66 கலித்தொகைப் பாடலில் நல்லந்துவனார் குறிப்பிடும் பண்பு எனப்படுவது ___ ஆகும்.

A) புணர்ந்தாரைப் பிரியாமை
B) பாடறிந்து ஒழுகுதல்
C) அலந்தவர்க்கு உதவுதல்
D) போற்றாரைப் பொறுத்தல்

67 தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை ?

A) வீணை, பறை
B) திமிலை, சங்கு
C) புல்லாங்குழல், முழவு
D) உடுக்கை, குடமுழா

68 கூற்று: 1 பலா மரத்தினால் செய்யப்பட்டு விலங்குத் தோலினால் கட்டப்படும் கருவி திமிலை ஆகும்.
கூற்று: 2 இதனைப் பாணி என்னும் பெயரால் அழைப்பார்.

A) கூற்று 1, 2 தவறு
B) கூற்று 1, 2 சரி
C) கூற்று 1 சரி 2 தவறு
D) கூற்று 1 தவறு 2 சரி

69 அறுவடைத் திருநாள் குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் __________ என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது

A) லோரி
B) மகரசங்கராந்தி
C) மஞ்சு விரட்டு
D) உத்தராயன்

70 காரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம் இச்சொற்கள் எவற்றுடன் தொடர்புடையவை ?

A) ஆகம விதிகள்
B) ஐம்பெருங்குழு
C) எண்பேராயம்
D) மங்கலப் பொருள்கள்

71 பாரதியார் எழுதிய உரைநடை நூல் __________

A) பாஞ்சாலி சபதம்
B) குயில்பாட்டு
C) கண்ணன்பாட்டு
D) தராசு

72 கைவினைப் பொருள்கள் செய்தவற்கு ஏற்ற மூங்கில் வகை __________

A) கூட்டு மூங்கில்
B) கல் மூங்கில்
C) மலை மூங்கில்
D) மூன்றும்

73 1952இல் புற்றுநோய் மருத்துவமனையை அடையாற்றில் நிறுவியவர் யார்?

A) முத்துலெட்சுமி
B) இராமாமிர்தம்
C) அன்னிபெசன்ட் அம்மையார்
D) வள்ளியம்மை

74 இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் யார்?

A) சாவித்திரிபாய் பூலே
B) மூவலூர் இராமாமிர்தம்
C) முத்துலெட்சுமி
D) பண்டித ரமாபாய்

75 பொருத்துக.

1. எரா – i) திசை காட்டும் கருவி
2. பருமல் – ii) அடிமரம்
3. மீகாமன் – iii) குறுக்கு மரம்
4. காந்த ஊசி – iv) கப்பலைச் செலுத்துபவர்.

A) (ii) (iii) (iv) (i)
B) (ii) (iv) (iii) (i)
C) (iii) (iv) (ii) (i)
D) (iii) (ii) (i) (iv)

76 'கோமகளின்' எநத் புதினத்திறகு தமிழ்நாடு அரசின் விருது கிடைத்தது?

A) தமிழ் அன்னை
B) அன்பின் சிதறல்
C) அன்னை பூமி
D) உயிர் அமுதாய்

77 "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை பாடலும் அப்படித்தான்" – என்று கூறியவர்

A) ஈரோடு தமிழன்பன்
B) தமிழ் ஒளி
C) மேத்தா
D) வைரமுத்து

78 பேராசிரியர் மா.சு அண்ணாமலை தமது எந்த நூலுக்காகத் தமிழக அரசின் பரிசு பெற்றார்?

A) மலரும் மாலையும்
B) இந்திய தேசிய இராணுவம் தமிழர் பங்கு
C) சுவரும் சுண்ணாம்பும்
D) கட்டுக்குள் அடங்காக் கவிதை

79 இராணி வேலுநாச்சியாரிடம் ஆங்கிலேயரின் படை தோற்று ஓடிய இடம்.

A) இராமநாதபுரம்
B) திண்டுக்கல்
C) மதுரை
D) காளையார் கோயில்

80 கேலிச்சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றின் மூலம் விடுதலை உணர்வைத் தூண்டியவர் யார்?

A) செக்கிழுத்த செம்மல்
B) காந்தியடிகள்
C) வீரபாண்டிய கட்டபொம்மன்
D) பாரதியார்

## MODEL QUESTION ANSWER KEYS

| Q.NO. | Ans | Q.NO. | Ans | Q.NO. | Ans | Q.NO. | Ans |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 21 | C | 41 | D | 61 | B |
| 2 | A | 22 | A | 42 | A | 62 | B |
| 3 | B | 23 | A | 43 | B | 63 | B |
| 4 | B | 24 | B | 44 | A | 64 | D |
| 5 | D | 25 | B | 45 | A | 65 | D |
| 6 | C | 26 | B | 46 | C | 66 | B |
| 7 | A | 27 | D | 47 | D | 67 | C |
| 8 | D | 28 | A | 48 | B | 68 | B |
| 9 | C | 29 | D | 49 | C | 69 | D |
| 10 | D | 30 | B | 50 | C | 70 | C |
| 11 | B | 31 | A | 51 | D | 71 | D |
| 12 | C | 32 | A | 52 | B | 72 | A |
| 13 | A | 33 | C | 53 | A | 73 | A |
| 14 | D | 34 | D | 54 | C | 74 | A |
| 15 | A | 35 | C | 55 | D | 75 | A |
| 16 | D | 36 | D | 56 | A | 76 | C |
| 17 | B | 37 | B | 57 | D | 77 | A |
| 18 | C | 38 | C | 58 | B | 78 | B |
| 19 | B | 39 | A | 59 | B | 79 | D |
| 20 | B | 40 | B | 60 | D | 80 | D |